மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: ஒரு நிகழ்ச்சியில் அங்கு நான் கலந்து கொள்கிறபோது அந்த பேருந்தை துவக்குவதாக இருந்தது. அந்தப் பேருந்து தயாரான நிலையில் இல்லை என்று நிர்வாகிகள் தெரிவித்தார்கள். சட்டப் பேரவைக் கூட்டம் முடிந்தவுடன் அது விடப்படும்.

மணிமுத்தாறு நீர்த்தேக்கத் திட்டத்தின் கீழ் எடுக்கப்பெற்ற நிலங்கள்.

* வினா எண். 97— திரு. சு. முத்துசாமி கரையாளர்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருநெல்வேலி மாவட்டம் மணிமுத்தாறு நீர்த்தேக்கம் கட்டுவதற்காக பொது மக்களிடமிருந்து நஞ்சை, புஞ்சை நிலங்கள் எடுக்கப்பட்டனவா?

(ஆ) ஆம் எனில், எத்தனை ஏக்கர்?

(இ) மேற்படி நிலங்களுக்குரிய பணம் பூராவும் கொடுக்கப்பட்டனவா?

(ஈ) அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு; (அ) ஆம்.

(ஆ) 4,111.76 ஏக்கர்

(இ) & (ஈ); இதுவரை நில எடுப்புக்காக ஈட்டுத்தொகை ரூ. 19,29,466 பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. இன்னும் 40.79 ஏக்கர் நிலங்களுக்கான ஈட்டுத்தொகை கொடுக்க வேண்டி இருக்கின்றது. இதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. சு. முத்துசாமி கரையாளர்: இந்த நீர்த்தேக்கத்திற்காக நிலங்கள் எடுத்து 20 ஆண்டுகளாகி விட்டன. எவ்வளவு பேர்களிடமிருந்து நிலங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன? எவ்வளவு பேர்களுக்குப் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு; எவ்வளவு பேர்களுடைய நிலங்கள் என்ற விவரம் இப்போது என்னிடமில்லை. மொத்தத் தொகை எவ்வளவு என்ற விவரமும் இப்போது என்னிடமில்லை. எவ்வளவு ஏக்கர்கள் என்ற விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

1979 நவம்பர் 3]

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : இன்னும் பலருக்கு பணம் கொடுக்காமலிருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 20 ஆண்டுகளுக்கு மேலாகியும் கூட பலருக்கு பணம் கொடுக்கப்படவில்லை என்பது வருந்தத்தக்கது. குறிப்பாக கீழ்முகம் பஞ்சாயத்துத் தலைவர் அவரைச்சேர்ந்த நான்கு பேர்களும் தொடர்ந்து மனுக்கள் போட்டிருந்தும் இது வரை பணம் கொடுக்கப்படவில்லை. டி.டி.ஸி. கூட்டத்தில்கூட சொல்லப்பட்டிருக்கிறது. சீக்கிரமாக பணம் பட்டுவாடாச் செய்யப்படவேண்டும் என்று சொல்லி ஆறு மாதங்களாகி விட்டன. இன்னும் பணம் பட்டுவாடா செய்யப்படவில்லை. ஆகவே பட்டுவாடா செய்யப்படாமல் இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு உடனடியாக பணம் பட்டுவாடா செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பல பேர்கள் என்று சொன்னார்கள். பல பேர்கள் அல்ல. 4,111 ஏக்கரில் 40 ஏக்கருக்கு மட்டுந்தான் இன்னும் பணம் கொடுக்கப்படவில்லை. ஆகவே ஒரு சிலருக்குத்தான் இன்னும் நிலுவை இருக்கிறது. அதற்குக் காரணம், வழக்குமன்றத்தில் வழக்குகள் பெண்டிங்காக இருக்கின்றன. ஒரு சிலருக்கு பணம் பட்டுவாடா செய்வதில் சில காலதாமதம் ஏற்படுவதற்குக் காரணம், அங்கிருக்கக்கூடிய நிலச் சுவாந்தார்கள், நிலத்தைக் கொடுத்தவர்கள் ஒரு சிலர் தங்களுக்குத்தான் கொடுக்கவேண்டும் என்று மனுக்கள் செய்திருப்பதால் இப்படிப்பட்ட நிலை இருக்கிறது. உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. ஜான் வின்செண்ட் : மூலக்கேள்வி, மணிமுத்தாறு நீர்த்தேக்கம் கட்டுவதற்காக எடுக்கப்பட்ட நிலங்களுக்குப் பணம் கொடுக்கப்பட்டதா என்பதாகும். கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் பஞ்ச நிவாரண வேலைகள் நடைபெற்ற போது மணிமுத்தாறு கிளைக்கால்வாய்கள் வெட்ட தனியார்களின் புன்செய், பட்டா நிலங்களை எடுத்ததற்கு அவர்களுக்கு உரிய தொகை கொடுக்கப்படவில்லை. இது குறித்து புகார்கள் கொடுத்தும் அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. ஆகவே தனியார்களின் பட்டா, புன்செய் நிலங்களுக்கு வெட்டப்பட்ட இடங்களுக்கான தொகையை உடனடியாகக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு ; மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய கருத்துக்கள் இந்தக் கேள்வியில் இடம் பெறவில்லை. இருப்பினும் அது பரிசீலனை செய்யப்படும்.

திரு. என். பெருமாள் : பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் ஒரு குளத்தைப்பற்றிக் கேட்டார்கள். அங்கு ஐந்தாறு சின்னஞ்சிறு கண்மாய்கள் மூலம் இப்போது நீர்ப் பாசனம் செய்யப்பட்டு வருகிறது. இதிலுள்ள விவசாயிகளுக்கு இன்னும் பணம் கொடுக்கப்படவில்லை. ஆகவே இந்த விவசாயி களுக்கு உடனடியாகப் பணம் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அரசு முன் வரும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்னபோது, சிலர் கோர்ட்டுக்குப் போயிருப்பதால் பணம் பட்டுவாடா செய்ய முடியவில்லை என்று சொன்னார்கள். கீழ்முகம் என்ற இடத்தி லுள்ள பழைய பஞ்சாயத்து தலைவர் பாண்டித்தேவர் என்பவர் எந்தவிதமான கோர்ட்டுக்கும் போகவில்லை. பணம் பட்டுவாடா செய்யவேண்டும் என்று அரசுக்கு மாறி மாறி மனு செய்து கொண்டிருக்கிறார்கள். 20 ஆண்டுகள் ஆகியும் இன்னும் அவருக்குப் பணம் கொடுக்கவில்லை. ஆகவே, இந்தக் குறிப்பிட்ட குடும்பத்திற்குப் பணம் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அப்படிப்பட்ட குறைகளை எழுதி என்னிடத்தில் நேரடியாகக் கொடுத்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெத்தலகாட்டூர் பெரிய ஏரிக்கரைகள்

*வினா எண். 98—திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருத்தணி தாலுக்கா மன்னூர் பிர்க்காவில் பெத்தல காட்டூர் பெரிய ஏரியின் கரையை உயர்த்தி நீர்த்தேக்கம் கட்டுவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் என்றால், வேலை எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆர். சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி தாலூகா மன்னூர் பிர்க்காவில் பெத்தலகாட்டூர் ஏரியின் மூலமாக ஆயிரக்கணக்கான ஏக்கர்களுக்குப் பாய்ச்சல் நடைபெறுகிறது. இந்த ஏரியின் கரையை உயர்த்தவேண்டும் என்றும் அத்துடன் கண்மாய்கள் எல்லாம் பழுது பார்க்க